## முதல்வர் தொடங்கி வைத்த மஞ்சள் பை குறித்து 1,77,000 இடங்களில் விழிப்புணர்வு!

# 10 கோடி மரக்கன்றுகளை நடப்பாண்டில் நட்டு - சுற்றுச் சூழலை பாதுகாப்போம்!

## சட்டப் பேரவையில் சுற்றுச் சூழல் துறை மானியக் கோரிக்கையில் 10 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் சிவ.வீ..மெய்யநாதன் பதிலுரை!

**சென்னை, ஜூன் 28 -**

**சட்டப் பேரவையில், சுற்றுச் சூழல் மற்றும் கால நிலை மாற்றம் - துறை மானியக் கோரிக் கையில் அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் 10 அறிவிப்புகளை அறிவித்து வழங்கிய பதிலுரை யில் முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப் பட்ட மஞ்சள் பை குறித்து 1,77,000 இடங்க ளில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டோம் என்றும், நடப்பாண்டில் 10 கோடி மரக்கன்று களை நட்டு சுற்றுச் சூழலை பாதுகாப்போம் என்றும் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பதிலுரை வருமாறு: -

ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்குரல் “அறி வாசான் தந்தை பெரியார்” அவர்களையும், மேல்தட்டு மனிதரிடமிருந்து அரசியலை அடித் தட்டு மக்களுக்கும் கொண்டு சேர்த்த “பேரறி ஞர் அண்ணா” அவர்களையும், ஐம்பெரும் கொள்கை முழக்கங்களை வடிவமைத்து, அதன்படியே நம்மை வழிநடத்தும், “முத்தமி ழறிஞர் அய்யா கலைஞர்” அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மனதில் உறுதி வேண்டும்.**
**வாக்கினிலே இனிமை வேண்டும்.**
**நினைவு நல்லது வேண்டும்.**
**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்.**
**கனவு மெய்ப்பட வேண்டும்.**
**கைவசம் ஆவது விரைவில் வேண்டும்.**
**தனமும் இன்பமும் வேண்டும்.**
**தரணியிலே பெருமை வேண்டும்.**

என்ற மகாகவி பாரதியின் கவிதை வரி களின்படி, எந்தச் சூழலிலும் மன உறுதி கொண்ட வராக, நல்லதையே உரைக்கும் நா வன்மை யுடையவராக, நாட்டை உயர்த்தும் நல்ல எண்ணங்கள் கொண்டவராக, எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் வெற்றி கண்டவராக, நாற்பதையும் வென்றெடுத்த (மேசையைத் தட்டும் ஒலி) நம் தலைவராக நாடே போற்றும் நல்லாட்சி நாயகராக, இந்தியத் திருநாடே வியந்து பார்க்கும் சிறந்த தலைவராக, உயர்ந்து நிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முத லமைச்சர் கழகத் தலைவர், தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இனப்பகையை வீழ்த்தி, இனமானம் காக்க வந்த எதிர்கால திராவிடத்தின் வழி காட்டி, நாளைய திராவிடத்தின் நம்பிக்கை ஒளிக்கீற்று, எங்களின் கலங்கரை விளக்கு, தமிழகத்தின் நம்பிக்கை இளைஞர்நலன் மற் றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச் சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது அவை முன்னவர் ஐயா நீர்வளத் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச் சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவர் தங் களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்க ளுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைய சூழலில் சுற்றுச்சூழல் கால நிலை மாற்றம் என்பது மிகமிக முக்கிய மான ஒரு துறை என்கின்ற அடிப்படையில், அதனு டைய பதிலுரையில் குறிப் பாகத் தமிழ்நாட்டில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்கீழ் தமிழ் நாடு முழுவதும் 56,500 தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது. இதிலே சிவப்பு வகை தொழிற்சாலைகள் என்று பார்த்தால், 13,500; ஆரஞ்ச் வகை தொழிற்சாலைகள் 30,000; பச்சை வகை தொழிற்சாலைகள் கிட்டத்தட்ட 13,000; இதிலே முதலமைச்சர் அவர்களின் மூன்று ஆண்டு கால ஆட்சியில் 2,677 புதிய தொழிற்சாலைகள் இயங்குவதற்கும், 10,855 தொழிற்சாலைகள் இயங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 26,000 தொழிற்சா லைகளை புதுப்பிப்பதற்கு இசை வாணைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, Single Window System மூலம் அனுப்பப்படுகிற அத்தனை மனுக்களுக்கும், உடனடியாகத் தீர்வு காணப்படுகிறது. குறிப் பாக முக்கியமானப் பிரச்சினை என்னவென் றால், இருக்கிற இந்த Red Category Indus triesஐ பொறுத்தவரைக்கும் ஒரு உயர்மட்ட குழு அமைத்து, அந்தத் தொழிற்சாலைகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டு, அந்த ஆய்வுகளின் கருத்துக்களைப் பெற்று, மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, பரிந்துரை களை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரி வித்துக்கொள்கின்றேன்.

அதேமாதிரி, குறிப்பாக இன்றைக்கு நீர்நி லைகளில் கழிவு நீர், தோல் தொழிற்சாலை, சாயக் கழிவுகள் இவற்றையெல்லாம் கலப் பதை நேரடியாக நாம் கண்காணித்து வருகி றோம். இருந்தாலும், அது தொடர்ந்து நடைபெ றுகிறது. அதனைத் தடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதோடு, ஒன்றிய அரசின் நிதி உத வியோடு புதிய பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. குறிப்பாக, plastic மனித உயிர்களுக்கு, மனித இனத்திற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக இயற்கைக்கு எதிரானது plastic. ஆனால், இன்றைக்கு அதிகமாகப் பரவி இருக்கின்ற plasticஐ நாம் இன்றைக்கு 14 வகையாக ஒருமுறை தூக்கி எறியக்கூடிய plas ticக்கு தடை செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், அதன் பயன்பாட்டை குறைக் கின்ற வகையில் நாம் அனைவரும் மேற் கொள்ள வேண்டுமென்பதுதான் நம்முடைய அத்துணைப் பேரின் எண்ணமாக இருக்கி றது. குறிப்பாக, பிளாஸ்டிக் என்பது அதன் அழிவு ஆண்டுக்காலம் 1000 முதல் 4500 ஆண்டுகள் வரை என்று சொல்லுகின்றனர். ஆக, பிளாஸ்டிக் நிலத்தில் தேங்குவதால் நிலம் மாசுபடுகிறது, நீர் மாசுபடுகிறது, ஆறுகள் மாசு படுகிறது, கடல் மாசுபடுகிறது. ஒட்டுமொத்த மாக பார்த்தால், பல்லுயிர் இணங்கள், பற வைகள், கடல்வாழ் உயிரினங்கள் மனிதர்கள் என அத்தனையையும் பாதிக்கக்கூடிய பிளாஸ்டிக் இடமிருந்து நாம் ஒதுங்கியிருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அடிப்படையில்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மீண்டும் மஞ்சள்பை என்ற மகத்தான திட்டத்தைத் தந்தார். அந்தத் திட்டம் வந்ததற்குப் பிறகு இன்றைக்கு 20 சத விகிதம் பிளாஸ்டிக் பயன்பாடு குறைந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு வித்திட்டவர் முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள். கிட்டத்தட்ட 1,77,000 விழிப்புணர்வு பிரச்சாரங்கள், 175 இடங்க ளில் தானியங்கி மஞ்சள்பை இயந்திரங்கள், கிட்டத்தட்ட பல இலட்சம் மஞ்சள் பைகளை வழங்கியிருக்கிறோம். அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் பிளாஸ்டிக்கிலிருந்து நாம் விடு படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கும்.

**மஞ்சள் பை விருதுகள்!**

அதேமாதிரி, மஞ்சள்பை விருதுகளும் வழங்கப்படுகின்றது. குறிப்பாக, பள்ளி, கல் லூரி மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்ப டுகின்றன. முதல், இரண்டு மூன்றாம் பரிசுக ளாக முறையே ரூ.10 இலட்சம், ரூ.5 இலட்சம் ரூ.3 இலட்சம் வீதம் வழங்குகின்ற நடவடிக் கையும் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரி, கடற்கரையோரம் பார்த்தீர்க ளென்றால், மீனவர்கள் மீன்களை பிடித்துவிட்டு, பழுதான மீன் வலைகளை கட லில் போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். அதற்கும் இப்போது, முதல்முறையாக காசி மேடு பகுதியில் பயன்படுத்தி தூக்கியெறியப்பட்ட மீன்வலைகளை collect செய்து அதை மறுசுழற்சிக்கு அனுப்புவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, குப்பைக் கிடங்குகள். தமிழ்நாட் டில் இருக்கின்ற பல்வேறு இடங்களில் பெரிய ளவிலான குப்பைக் கிடங்குகள். இன்றைக்குக் கூட காலையில் ஒரு பத்திரிகையில், மிகச் சிறப்பாக பெருங்குடியில் Biomining முறை யில் குப்பை பிரித்தெடுக்கும் படத்தை போட்டி ருந்தார்கள். அப்படி நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள குப் பைக் கிடங்குகளையெல்லாம் Biomining முறையில் பிரித்தெடுக்கப்பட்டு இன்றைக்கு உயிர் நிலங்களாக மீட்டெடு க்கப்பட்ட அந்த இடங்களில் மரங்கள் நடவு செய்யப்பட்டு வரு கின்றன.

அதேமாதிரி, புதுக்கோட்டை மாநகராட்சிக் குட்பட்ட, திருக்கட்டளை பகுதியில் இருக்கின்ற மிகப் பெரிய குப்பைக் கிடங்கு Biomining முறையில் குப்பைக் கிடங்கு களை பிரித்தெடுப்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித் துக்கொள்கிறேன்.

அதேமாதிரி, பெருந்துறை சிப்காட் பகுதியி லுள்ள மக்கள், விவசாயிகள் நீர் மாசின் கார ணமாக ஒரு திட்டம் வேண்டுமென்று சொன் னார்கள். இங்கே இருக்கின்ற வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, இளைஞர் நலன் மற் றும் விளையாட்டு மேம்பாட்டு நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், முத லமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டு, ரூ.40 கோடி செல வில் கசிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்ப தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கிறது. இது நிலத்தடி நீரை உறிஞ்சிஒரு நாளைக்கு 20 இலட்சம் லிட்டர் தண்ணீர் மறு சுழற்சி செய்யப்பட்டு, மீண்டும் அந்தத் தொழிற்சாலைகளுக்கே வழங்கப்படவிருக்கி றது.

அதேமாதிரி, வேலூர் மாவட்டத்தில் இரா ணிப்பேட்டையில் TCCLக்குட்பட்ட chromium கழிவுகள் பல ஆண்டுகளாக அந்தப் பகுதியில் தேங்கி கிடந்து, நீர்நிலைகளில் நிலமாசு ஏற்பட் டதை உணர்ந்து ரூ.15 கோடியில் இன்றைக்கு அந்த மாசு வெளியேறாத அளவுக்கும் தடுப்புச் சுவர் அமைப்பதற்கும் 15 திட்டங்கள் நிறை வேற்றப்படும்.


குறிப்பாக, தென்னை விவசாயிகள், தேங் காய்நார் உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்தனர். என்னவென்றால், தேங்காய்நார் உற்பத்தித் தொழிற்சாலையை White catego ryக்கு மாற்ற வேண்டுமென்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தனர். உடனடியாக அவர்களின் கோரிக் கையேற்று தமிழக முதலமைச்சர் அவர்க ளின் கவனத்திற்குக் கொண்டுச் செல்லப்பட்டு, அந்த தேங்காய்நார் தொழிற்சாலைகள் 10.10. 2023 அன்று White categoryக்கு மாற்றப்பட் டது. அதனால், தென்னை விவசாயிகளும் பலனடைந்தார்கள், தேங்காய்நார் உற்பத்தி யாளர்களும் பலனடைந்தார்கள். அப்படிப்பட்ட திட்டங்களையும் நிறைவேற்றியிருக்கிறோம்.

**“திங்க என்ன வெண்குடை**
**ஒண் ஞாயி றன்னோன் புகழ்மா யலவே”**

என்ற புறநானுற்று வரிகள். அதியமான் ஆட்சி திங்களைப் போல் குளிர்ச்சி உடையது; அதியமான் புகழானது ஞாயிறைப் போன்றது; கதிரவனின் ஒளியை யாராலும் மறைக்க முடி யாது அதேபோன்று அதியமான் புகழையும் மறைக்க முடியாது என்பது புறநானூற்றின் வரிகளாகும். அதுபோலவே, நானிலம் தலைக்க தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அயராது பாடுபட்டு வரும் நமது முதலமைச்சர் அவர்களின் புகழை யாரும் இந்த மண்ணில் மறைக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட நமது முதலமைச்சர் அவர் கள் இயற்கையைப் பாதுகாக்க, நீர்நிலைகளை பாதுகாக்க தன் மூன்றா ண்டுக் காலங்களில் தந்திருக்கின்ற முத்தான திட்டங்களை நான் பட்டியலிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் (Tamil Nadu Climate Change Mission), பசு மைத் தமிழ்நாடு இயக்கம் (Green Tamil Nadu Mission) (Tamil Nadu Wetlands Mission) தமிழ்நாடு ஈரநில இயக்கம் (Tamil Nadu Coastal Restoration Mission) தமிழ்நாடு நெய் தல் மீட்சி இயக்கம் போன்ற திட்டங்களை நமது முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி தந் திருக்கிறார்கள். கடலோரப்பகுதியில் இருக் கின்ற, இன்றைக்கு வெப்பமயமாதலால் கட லோர கடற்கரை பகுதியில் இருக்கின்ற 1,076 கிலோ மீட்டர், கிட்டத்தட்ட 14 மாவட்டங்கள் பாதிக்கக்கூடிய நிலையில் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தப் பகுதியில் Bioshield முறையில் மாங்குரோ காடுகள், பனை மரங் கள், அந்த மண்ணை சார்ந்த புங்கன் மரங் கள், வேப்ப மரங்கள் போன்றவை நடவு செய் வதற்கான பணிகள் அந்த திட்டத்தின் மூலமாக நடைபெறுகிறது.



அதே மாதிரி காலநிலை திறன்மிகு கிராமங் களும் இன்றைக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிச்சா வரம், கோடியகரை, முத்துப் பேட்டை, இரா மேஸ்வரம், திருச்செந்தூர், குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு, ஒகேனக் கல், பழவேற்காடு என பதினோறு கிராமங்கள் Climate smart villages ஆக விரைவில் மாற றப்படும்.

அதேமாதிரி கோயில்களை அதனுடைய பசுமை மாறாமல் மீட்டெடுப்ப தற்காக மதுரை மீனாட்சி அம்மன் கோயில், அன்னை வேளாங்கன்னி பேராலையம் ஆகிய இரண்டு வழிப்பாட்டு தலங்களையும் காலநிலை மீள்தி றன் கொண்ட திருக்கோயில்களாக மாற்றுவ தற்கு மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேமாதிரி car bon சமநிலை அடையவேண்டும் என்பது தான் நம்முடைய இலக்கு. அந்தவகையில் தமிழ்நாட்டில் நீலகிரி கோயம்புத்தூர், இராஜ பாளையம், இராமேஸ்வரம் ஆகிய நான்கு நக ரப்பகுதிகளில் carbon சமநிலை கொண்டவை களாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேமாதிரி ஈரநில இயக்கத்தின் மூலமாக 2022ல் இருந்து 2024 வரைக்கும் 15 ஈரநி லங்களுக்கு Ramsar அங்கீகாரம் பெறப்பட்டி ருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின் றேன். அதேமாதிரி முக்கியமானது ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் அவர் கள் பேசும்போது சொன்னார் நெய்தல் மீட்சி

## மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் ஆயிரம் குறுங்காடுகள்!

இயக்கம் முக்கியமான திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக உலக வங்கி உதவியுடன் இந்தத் திட்டத்தை செயல்படுத்த தொடங்குகி றோம். அதில் ஈரநிலங்களை பாதுகாத்தல், செங்கல்பட்டு மாவட்டம், கடம்பூர் பல்லுயிர் பூங்கா, நாகை மற்றும் சென்னையில் கடல் ஆமைகள் பாதுகாப்பு மையம், தஞ்சை மனோராவில் சர்வதேச கடல் பசு பாதுகாப்பு மையம் போன்ற பணிகளுக்காக ரூ.770 கோடியும், கடற்கரை மேலாண்மை, அலை யாத்திக் காடுகளை உருவாக்குதல், பவளப் பாறைகள் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு கட லோரப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு ரூபாய் 340 கோடியும், கடல்சார் மக்களின் வாழ்வா தாரங்களை மேம்படுத்தும் பொருட்டு, நீலக் கொடி கடற்கரை சான்று, நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார், தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் அந்தக் கடற்கரையை ஆய்வு செய்து வாய்ப்பு இருப்பின் அது நீலக் கொடி கடற்கரை சான்று பெறு வதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப்படும்.

நிலையான சுற்றுலா போன்ற நீலப்பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பணி களுக்காக ரூபாய் 250 கோடியும், நமது திரு வெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங் கர் அவர்கள் பேசிய, எண்ணூர்க் கழிமுகம் மீட்டெடுப்புக்கென, ரூபாய் 40 கோடியும் கால நிலைத் திறன்மிகு கடலோர கிராமங்கள், மீண்டும் மஞ்சப்பை இயக்கம் போன்ற திட்டங் களை வலுப்படுத்த ரூபாய் 175 கோடியும், திட்ட மேலாண்மைக்கு ரூபாய் 100 கோடி ஆக மொத்தம் 1,675 கோடி ரூபாயில் நெய்தல் மீட்சி பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக IPCC report, 442022ன்படி report என்ன சொல்லியிருக்கிறது என்றால், இந்த இயற்கை, இப்புவியில் இனிமேல் இயல் பான காலநிலை ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்று எச்சரிக்கையை தந்திருக்கி றது. அதோடு மட்டுமல்ல 2030க்குள்ளாக 1.5 degree Celsius உயர்வை கட்டுப்படுத்துவ தற்கு உலகம் முழுவதும் நடவடிக்கை வேண் டுமென்று எச்சரிக்கையும் தந்திருக்கிறது. அதேபோல உலக வானிலை ஆய்வு மையம் Englandல் இருக்கின்ற Met Office அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இன்னும் ஐந்து ஆண்டுகளில் 1.5 degree Celsius ஏதா வது ஓர் ஆண்டில் உயர்வதற்கு 80 சதவிகிதம் வாய்ப்பு இருக்கிறது என்ற செய்திகளெல்லாம் வருகிறபோது நமக்கு மிகுந்த கவலையும், மனவேதனையும் தரக்கூடியது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால் சவூதி அரேபியா வில் மெக்கா பயணம் மேற்கொண்ட இஸ்லா மிய சகோதரர்கள் இன்றைக்கு 1300 பேர் வெப்பம் அலையின் காரணமாக உயிரிழந்தி ருக்கிறார்கள் என்றால் ஏற்படக்கூடிய பாதிப்பு களை நாம் அனைவரும் உணரவேண்டும். இதுவரைக்கும் வடமாநிலங்களில் மட்டும் தான் வெப்ப அலை வீசியது. ஆனால் இப் போது தென் மாநிலங்களிலும் தாக்க தொடங்கி இருக்கிறது.

அதை நாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு முக்கியமான ஒரு பணியை நமது முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 2070க்குள்ளாக carbon neutral என்ற இலக்கு இந்திய பிரதமர் அறிவித் திருக்கிறார். நமது முதலமைச்சர் அவர்கள் 2070க்கு முன்பாகவே நாம் carbon neutral என்ற இலக்கை அடைவோம் என்று முதல மைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான திட்டங் களையும் நிறைவேற்றி யிருக்கிறார். குறிப் பாக சொல்லவேண்டுமா னால் wind energy, solar energy, green hydrogen போன்ற புதுப் பிக்கத்தக்க ஆற்றலை தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உருவாக்கியிருக்கிறார். நாம் செய்யவேண்டியப் பணிகள் பசுமை தமிழகம் என்கின்ற மகத்தான திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்.

கடந்த ஆண்டு மட்டும் நான் அறிவித்தபடி தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார் பாக ஆயிரம் குறுங்காடுகள் அமைத்து கிட்ட தட்ட 17 இலட்சம் மரக்கன்றுகளை நடவு செய்து உருவாக்கியிருக்கிறோம். அதே போன்று பசுமைத் தமிழகம் திட்டத்தின் மூல மாக 7 கோடி மரக்கன்றுகளை நடிவு செய்தி ருக்கிறோம். தமிழ்நாட்டினுடைய ஒட்டு மொத்த பரப்பு ஒரு இலட்சத்து முப்பதாயிரம் சதுர கிலோ மீட்டர். இதிலே வனம் இருக்கக்கூ டிய பரப்பு என்று பார்த்தால், நாற்பத்து இரண் டாயிரம் கிலோ மீட்டர். இப்பொழுது இருக் கின்ற வனத்தினுடைய பரப்பளவு முப்பத்து இரண்டாயிரம் சதுர கிலோ மீட்டர் மட்டுமே. நாம் இன்னும் பத்து ஆண்டுகளுக்குள்ளாக பத்தாயிரம் சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பை அதிகப்படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயத் தில் இருக்கின்றோம். இங்கே இருக்கின்ற நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆந்திராவில் இராஜமுந்திரியிலிருந்து உயர்ந்த மரக்கன்றுகளைக் கொண்டு வந்து நெடுஞ்சாலையிலுள்ள இரண்டு பகுதிகளிலும் நடவு செய்து நாம் பயணிக்கும்போது பசுமை யாகக் காட்சியளிக்கிறது என்றால் மரங்களை வளர்த்தெடுத்துத் தந்தவர் நமது நெடுஞ்சா லைத் துறை அமைச்சர் . அதேபோல, உண வுத் துறை அமைச்சர் சக்கரபாணி , அவரு டைய தொகுதியிலே 117 ஏக்கரிலே ஆறு இலட்சத்து நாற்பதாயிரம் மரங்களை நடவு செய்து வளர்த்தெடுத்து கொடுத்திருக்கிறார்.

இங்கிருக்கும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும் திருச்சியில் மாவட்ட ஆட் சித் தலைவர் மூலமாக ஒரு கோடி மரங்களை நடவு செய்வதற்கான பணிகளை மேற் கொண்டுள்ளனர். இந்து சமயம் மற்றும் அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள், திருக் கோயில்களில் நந்தவனங்களை உருவாக்கத் தொடங்கியிருக்கிறார். ஆம் நாம் அத்தனை பேரும் சேர்ந்தால் கண்டிப்பாக இந்த இலக்கை அடைய முடியும் என்பதை நான் தெரிவித் துக்கொண்டு, இந்த ஆண்டு இலக்காக 10 கோடி நாட்டு மரங்களை நடவு செய்வதற்கு நாம் அனைவரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பேரவைத் தலைவர்: நடுகின்ற மரங்க ளும் அரை அடி, கால் அடியில் மரங்களை கொடுத்து நடுங்கள் என்று சொல்லாமல். Chi naவில் ஐந்து வருடங்கள் மற்றும் பத்து அடிக்கு மேலுள்ள மரங்களைத்தான் கொடுக்கிறார் கள். அந்த முயற்சியும் செய்யுங்கள்.

அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்: கண்டிப் பாக. தற்போது இராஜமுந்திரியில் 12 அடி height 14 கிலோ ஒரு மரக்கன்றின் எடை. அதேபோன்று பல இடங்களில் கருவேல மரங் கள் இருக்கின்றன. அதை அகற்றிவிட்டு நாட்டு மரங்களை நடவு செய்ய இருக்கின்றோம். புதுக்கோட்டை மாவட்டத்தில் நாற்பத்து ஐந்தா யிரம் ஏக்கரில் அனைத்து இடங்களிலும் தைல மரங்களாக இருக்கின்றன. அந்த தைல மரங்களை அகற்றிவிட்டு காப்புக் காடுகளாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்ப டும். அதேபோன்று பசுமைப் பள்ளித் திட்டத்தையும் நாம் அறிவித்திருக்கிறோம்.

“புவி வெப்பமயமாதல் மற்றும் அதன் விளைவாக காலநிலை மாற்றமெனும் கடு மையான சிக்கல் நம் உலகத்தை பாதிப்பதை தற்போது நாம் எதிர்கொண்டு வருகிறோம். இது உணவு உற்பத்தி, நன்னீர், நலவாழ்வு ஆகியவற்றில் நீண்ட காலத்திற்கான கேடு மிக்க தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியது. கடல் மட்ட உயர்வு, அதிகப்படியான மழை, வெள்ளம் போன்றவற்றால் கடலோரப் பகுதி கள் நேரடியாகப் பாதிக்கப்படும். இதனால் எல்லோரும் பாதிக்கப்படப் போகிறார்கள் என் றாலும், ஏழை மக்கள்தான் அதிகமாக பாதிக் கப்படுவார்கள்.”

இந்தக் கருத்துகள் காலநிலை மாற்றம் தொடர்பான பல ஆராய்ச்சிகளை மேற் கொண்ட அறிஞர்கள் சொன்ன கருத்துகள் அல்ல, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2007 ஆம் ஆண்டிலேயே சுட்டிக் காட்டிய கருத்துகள் என்பதை நான் தெரிவித் துக்கொள்கின்றேன். ஏனென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான் இயற்கை யைப் பாதுகாப்பதற்கு, பல்லுயிர் பெருக்கத் தைப் பாதுகாப்பதற்கு ஒட்டுமொத்தமாக, இது போன்ற திட்டங்களை நிறைவே ற்றக்கூடியது என் பதை நான் தெரிவித்துக்கொண்டு,

இத்துடன் என் உரையை நிறைவு செய்வ தோடு, எனது சட்டமன்ற உரையை, கொள்கை விளக்க புத்த கத்தைத் தயார் செய் வதற்கும் எனக்கு உறுதுணையாக இருந்த, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் செயலாளர்கள் N. முருகா னந்தம், டாக்டர் P.உமாநாத், M.S. சண்மு கம், அனுஜார்ஜ், முதலமைச்சரின் முதன்மை தனிச் செயலாளர் M. தினேஷ் குமார் , இத்து றையின் கொள்கை விளக்க புத்தகத்தைத் தயாரிக்கும் பணியில் எனக்கு உறுதுணை யாக இருந்த, சுற்றுச்சூழல், காலநிலை மாற் றம் மற்றும் வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ராகுல்நாத், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய தலைவர் திருமதி ஜெயந்தி, துறையின் உயர் அதிகாரிகள், அனைத்து பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன் றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின், மானியக் கோரிக்கையின் மீது மாமன்ற உறுப்பினர்கள் 106 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். எனவே மாமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மா னங் களை திரும்ப பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு விடைபெறுகிறேன்.

**அறிவிப்புகள்!**

1) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பை முன்னி லைப்ப டுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இத்திட் டம், பள்ளிக் குழந்தைகள், கல்லூரி மாணவர் கள் மற்றும் இளைஞர்களை வாழ்விடப் பாதுகாப்பு, அந்நிய தாவர ஆக்கிரமிப்பு அகற்றம், கடற்கரைகளைத் தூய்மைப்படுத்து தல், வன உயிரின கணக்கெடுப்பு, நெகிழிக் கழிவு அகற் றம், கடல் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் குடிமக் கள் அறிவியல் போன்ற பல்வேறு செயல்பாடுக ளில் தன்னார்வத்துடன் ஈடுபடுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதற்கென தனி வலைதளமொன்று உருவாக்கப்பட்டு, தன் னார்வலர்கள் அதில் பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுவர். மேற்கூறிய செயல்பாடுகள் அவ்வலைதளத்தில் பட்டியலிடப்பட்டு, தன்னார் வலர்கள் இப்பணிகளை மேற்கொள்ள, அவர்கள் விருப்ப ப்படும் நேரத்தை குறிப்பிடு மாறு கேட் டுக் கொள்ளப்படுவர். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் தன்னார்வலர்களுக்கு போக்கு வரத்து மற்றும் சிற்றுண்டி ஆகியவை வழங்கப் படும். முதற் கட்டமாக, இத்திட்டம் சோதனை அடிப்படையில் தொடங்கிச் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கு 2024-2025 ஆம் ஆண் டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.22.35 கோடி நிதியி லிருந்து ரூ.2 கோடி பயன்படுத்தப்படும்.

2) தமிழ்நாடு நாள்தோறும் நலவாழ்வுத் திட் டமானது காலநிலை மாற்றத்தை அடிப்படையாக கொண்டு, மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற் றுச்சூழல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள ஆரோக்கியமான இணைப்பை புரிந்துகொண்டு, ஒருங்கிணைந்த செயல்பாடுகள்மூலம் இம்மூன்று தொகுதிகளிலும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொள்வதை நோக்க மாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் நோய் கண்காணிப்பு மற் றும் காலநிலை மாற்றத்திற்கேற்ற விவசாய முறைகள் மற்றும் சூழல் அமைப்பு பாதுகாப்பு போன்றவற்றில் கவனம் செலுத்தப்படும். மேலும், துறை வாரியான காலநிலை மாற்றத் திற்கேற்ற உத்திகள் மற்றும் காலநிலை மாற்றத் தால் ஏற்படக்கூடிய நோய்கள் மற்றும் பாதிப்புகள் போன்றவை கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப் படும்.

இத்திட்டத்திற்காக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.22.35 கோடி நிதியிலிருந்து ரூ.3 கோடி பயன்படுத்தப்படும்.

3) தமிழ்நாடு புதுமைத் தொழில்முனை வோர் திட்டம்

இத்திட்டமானது காலநிலை மாற்றத்தால் ஏற் படும் பாதிப்புகளை தணிக்க உதவக்கூடிய நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளோடு ஒருங்க மைந்த புதுமையான தீர்வுகளை அளிக்கும் திட் டங்களை உருவாக்கும் மாணவர்கள், தனிநபர் கள், குழுக்கள் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களை கண்டறியும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 10 குழுக்கள் தேர்வு செய் யப்பட்டு, அவர்கள் தொழில் மாதிரிகளை உரு வாக்குவர். அம்மாதிரிகளை பரிசீலித்து, சிறந்த 5 மாதிரிகளை அளிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 குழுக்களுக்கு தொழில் நிறுவனங்கள் துவக்குவ தற்கான ஆதார நிதி வழங்கப்படும். இத்திட்டத் தின்படி, பசுமைத் தொழில்களை முன்னிலைப் படுத்தும் விதமாக சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றம் தொடர்பான சவால்களை எதிர் கொள்ள உதவும். சூழலுக்கு உகந்த பொருட் களின் உற்பத்தித் திட்டங்க ளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டம் ஸ்டார்ட் அப் தமிழ் நாடு இயக்கத்தோடு ஒருங்கிணைந்து செயல்ப டுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.22.35 கோடி நிதி யிலிருந்து ரூ.3 கோடி பயன்படுத்தப்படும்.

4) பசுமைப் பள்ளிக்கூடத் திட்டம்

காலநிலை மாற்றம் என்பது தற்போது ஒரு தவிர்க்க இயலாத பிரச்சினை என்பதால் இளைய தலைமுறையினர் இதுகுறித்து அறிந்து கொள்வதும், அதன் விளைவுகளை ஏற்பதற்கும், அதனால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற் கும் தயாராவது அவசியமான ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதல மைச்சரின் பசுமைத் தமிழ்நாடு திட்டத்தின் குறிக்கோளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சூழல் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் 25 பள்ளிகள் மற்றும் 2023-2024 ஆம் ஆண்டில் 46 பள்ளிகள் தேர்வு செய்யப் பட்டு அப்பள்ளிகளில் இத்திட்டப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, 2024-2025 ஆம் ஆண்டில் மேலும் 100 பள்ளிகளில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் நிதியிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

5) தமிழ்நாட்டில் உள்ள திடக்கழிவு குப்பைக் கிடங்குகளில் செயற்கை நுண்ணறிவு அடிப்ப டையிலான கண்காணிப்பு

சமீப காலங்களில், வெயிலின் தாக்கம் அதிக ரித்து வருவதால், தமிழகத்தில் உள்ள திடக்கழிவு குப்பைகிடங்குகளில் மீத்தேன் அளவு அதிக ரித்து, தீ விபத்து ஏற்பட்டு பல நாட்களுக்கு நீடிப்ப தால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. ஆகையால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக, குப்பைகொட்டும் இடங்களை திறம்பட கண்காணிப்பது தற்போதைய தேவை யாகும். எனவே, வெப்ப புகைப்பட கருவி (Cam era), வாயு கண்டறியும் ஸென்ஸார்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கட்டுப்பாட்டு மென்பொருள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, நிகழ்நேர தரவுகள் அடிப்படையில் எச்சரிக்கைகளை வழங்குவதன்மூலம், அபாயங்களை குறைக்கவும் மற்றும் நிர்வகிக்க வும் முடியும்.

இதன் அடிப்படையில், ஆரம்ப கட்டமாக சென்னை மாநகராட்சியில் உள்ள பெருங்குடி மற்றும் புதுக்கோட்டை மாநகராட்சியில் உள்ள திருக்கட்டளை ஆகிய இடங்களில் உள்ள திடக் கழிவு குப்பை கிடங்குகளில் ரூபாய் 4 கோடி செலவில் வெப்ப புகைப்பட கருவி (Camera) மற் றும் விஷவாயு கண்டறியும் ஸென்ஸார்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நிறுவப் படும்.

6) தமிழ்நாட்டில் மில்லியன் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் ஒலி வரைபட ஆய்வு மேற்கொள்ளுதல் (சென்னை, திருச்சி, கோயம் புத்தூர் மற்றும் மதுரை)

வாகன பயன்பாடு, தொழிற்சாலை செயல்பா டுகள், கட்டுமான தொழில்கள் மற்றும் உட்கட்ட மைப்பு மேம்பாடு ஆகியவற்றால் தமிழ்நாட்டின் பெருநகரங்களில் ஒலி மாசு அதிகரித்துள்ளது. ஒலி மாசினால் மக்களின் உடல்நலம் மற்றும் மனநலம் பாதிப்படைகிறது.

சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளின் எல்லைக்குட்பட்ட குடி யிருப்பு, போக்குவரத்து சந்திப்புகள், கல்வி நிறுவ னங்கள், மருத்துவமனை கள், வணிக பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதி களில் ஒலிமாசினை ஸென்ஸார்மூலம் அளவி டும் ஒலி மாசு வரைபட ஆய்வு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் ரூபாய் 50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

7) வாரிய ஆய்வகங்களை காற்று மற்றும் நீர் பகுப்பாய்வுக்கான அதிநவீன கையடக்க கருவி களைக் கொண்டு மேம்படுத்துதல்

புயல் மற்றும் பெருவெள்ளம், எதிர்பாராத வாயு கசிவுகள், எண்ணெய் கசிவுகள், தீ மற்றும் வேதியியல் விபத்துக்களின்போது வெளியேறும் நச்சு வாயுக்கள் / வேதிப்பொருட்களை உடனடி யாக கண்டறிந்து பொதுமக்களின் புகார்களை விரைவில் நிவர்த்தி செய்யும்பொருட்டு காற்று மற்றும் நீர் தர ஆய்வுகளை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக கீழ்க்கண்ட உபகரணங்கள் வாரியத் தின் ஆய்வகங்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு வாரிய நிதியி லிருந்து ரூபாய் 6 கோடி செலவில் வாங்கப்படும்.

1. கார அமில தன்மை (pH), கடத்துத்திறன் (Conductivity) மற்றும் கலங்கல் தன்மை (Tur bidity) கண்டறிவதற்கான கையடக்க கருவிகள்
2. எளிதில் ஆவியாகும் கரிம கார்பன் (VOC analyser) பகுப்பாய்வு கருவி
3. நைட்ரிக் ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக் சைடு மற்றும் நுண் துகள்கள் கலந்து வெளியே றும் வாயுக்களை கண்டறிவதற்கான ஃப்ளூ கேஸ் அனலைசர் (Flue gas analyser)
4. அம்மோனியா, கார்பன் மோனாக்சைடு (CO), கார்பன் டை ஆக்சைடு ($CO_2$), மற்றும் ஓசோன் ($O_3$) போன்ற வாயுக்களின் அளவினை கண்டறியும் கையடக்க சென்சார் கருவிகள்
5. காற்றில் மிதக்கும் 2.5 மைக்ரான் மற்றும் 10 மைக்ரான் நுண் துகள்களின் அளவினை கண்டறியும் கையடக்க கருவி
6. அல்ட்ரா வயலட் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் (Ultraviolet Spectrophotometer).
7. பென்சின், டொலுவின், எத்திலின், சைலின் (BTEX) கண்டறியும் கையடக்க கருவி

8) தமிழ்நாடு ஏரிகளின் நிகழ்நேர தர கண் காணிப்பு திட்டம் (TNLMP) (பூண்டி, செம்பரம்பாக் கம், உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல்)

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தேசிய நீர் தரக் கண்காணிப்பு திட்டத்தின் (NWMP) கீழ், ஆறுகள், ஏரிகள் மற்றும் நிலத்தடிநீர் ஆகியவற் றின் நீரின் தரத்தை மாதம் ஒருமுறை மாதிரிகள் சேகரித்து கண்காணித்து வருகிறது.

நீரின் தரத்தினை நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படை யிலான தரவு பகுப்பாய்வுமூலம் தொடர் கண்கா ணிப்பு செய்வதற்கான “தமிழ்நாடு ஏரி தர கண் காணிப்பு திட்டம்” (TNLMP) முக்கியத்துவம் வாய்ந்த நீர் ஆதாரங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் முதல் கட்டமாக பூண்டி, செம்பரம்பாக் கம், உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஏரிகளில் செயல் படுத்தப்படும்.

இந்த திட்டம்மூலம் பெறப்படும் தரவுகள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒருங்கி ணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையத்து டன் இணைக்கப்பட்டு, நீர் நிலைகளின் தரம் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

இத்திட்டமானது சென்னை தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து தமிழ்நாடு மாசு கட்டுப் பாடு வாரியத்தால் ரூபாய் 5 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

9) தமிழ்நாட்டின் கடல் வளங்கள் மற்றும் நீலப் பொருளாதாரத்தை நிலையான முறையில் பயன்படுத்தும் )TNSHORE( திட்டத்தின்கீழ் கட லோர மாவட்டங்களில் கடற்கரை மாசினை குறைத்தல்

கடலோர மாவட்டங்களில் சுற்றுச் சூழல் சவால்களை எதிர்கொள்ளவும், நிலையான கட லோர மேலாண்மைக்கான விரிவான உத்தி களை செயல்படுத்தவும், தமிழ்நாட்டில் கடல் வளங்கள் மற்றும் நீலப் பொருளாதாரத்தை, நிலையான முறையில் பயன்படுத்தும் திட் டத்தை உலக வங்கியின் உதவி யுடன் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்று தமிழ் நாடு அரசு அறிவித்தது.

இத்திட்டத்தின்கீழ் “தமிழ்நாடு கடற்கரைக ளில் மாசினை தடுத்தல்” என்ற கருப்பொருளின் படி, 14 கடலோர மாவட்டங்களில் கடற்கரை மாசுக் கண்காணிப்பு நிலையங்கள், நீலப் படை கள், மீன் வலை சேகரிப்பு மையங்கள், குறிப்பிட்ட நதி முகத்துவார பகுதிகளில் மிதக்கும் குப்பைத் தடுப்பான்கள் போன்ற மாசுக்குறைப்பு நடவடிக்கைகளை ரூபாய் 100 கோடி செலவில் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

10) அனைத்து மாவட்டங்களிலும் மாதந் தோறும் ஒரு வாரம் முழுவதும் நெகிழிக் கழிவு கள் சேகரிப்பு திட்டம்

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சி கள் மற்றும் ஊராட்சிகளை உள்ளடக்கிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலமாக ஒவ்வொரு மாத மும், ஒரு வாரம் முழு வதும் தொடர்ந்து நெகிழிக் கழிவுகள் சேகரிக்கப் படும். அவ்வாறு சேகரிக்கப்பட்ட நெகிழிக் கழிவு கள், மறு சுழற்சிக்கு அல்லது சிமெண்ட் தொழிற்சாலைகளில் எரிபொருளாக பயன்படுத்த அனுப்பப்படும். இதன்மூலம் நீர், நிலம், காற்று மற்றும் கடல் பகுதிகள் நெகிழியால் மாசுபடுவது முற்றிலும் தடுக்கப்படும். இச்செயல்பாடுகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பதிலுரை வழங்கினார்.